ஈச்சம்பட்டி கிராமத்தில் ஆரம்பப்பள்ளிக் கட்டிடம்.

*வினா எண் 13— திரு. எஸ். வி. இராமசாமி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பெரம்டலூர் தாலுக்கா, குரும்பலூர் பேரூராட்சியில் ஈச்சம்பட்டி கிராமத்தில் அரிசன நலத்துறையால் ஆரம்பப்பள்ளி கட்டிடம் கட்ட நில ஆர்சிதம் செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அந்தக் கட்டிடம் எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) ஈச்சம்பட்டி கிராமத்தில் அரிசன நல ஆரம்பப்பள்ளி கட்டிடம் கட்ட நிலம் ஆர்சிதம் செய்யப்படவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

சென்னையிலுள்ள அரிசனப் நலப்பள்ளி ஆசிரியர்கள்.

*வினா எண் 14— திரு. சு. பாலன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள அரிசனப் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள், ஆசிரியைகள் எவ்வளவு பேர் ?

(ஆ) இதில், அரிசன வகுப்பைச் சார்ந்தவர்கள் எத்தனை சதவிகிதம் ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) சென்னையில் உள்ள அரிசன நலத்துறைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியைகளின் எண்ணிக்கை முறையே 37 மற்றும் 122 ஆகும்.

(ஆ) இதில் அரிசன வகுப்பைச் சார்ந்தவர்கள் 70·4 விழுக்காடு ஆகும்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அரிசனப் பள்ளியில் பணியாற்றுகின்ற தலைமை ஆசிரியர்கள் எத்தனை சதவீதம் என்பதை அறிவிக்க இயலுமா ?